## தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை – 6.

ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள். 06.02.2023

பொருள்: பள்ளிக்கல்வி - 2022–2023–ஆம் கல்வியாண்டில் கல்வி இணை / கல்விசாரா மன்றச் செயல்பாடுகள் – சிறார் திரைப்படங்கள் திரையிடுதல், வினாடி வினா, இலக்கிய மன்றம் மற்றும் வானவில் மன்றம் – போட்டிகள் நடத்துதல் – பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் – முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு கூடுதல் அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள், ந.க.எண். 19528/எம்/இ1/2022,நாள். 11.06.2022.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள், *ந.க.எண்.019528/எம்/இ1/2022, நாள். 22.08.2022.*
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.க.எண்.019528/எம்/இ1/2022, நாள் 10.01.2023.

******

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி இணைச் செயல்பாடுகளை ஊக்குவிக்க வெவ்வேறு காலகட்டங்களில் இலக்கியம், கவின்கலை, சூழலியல் உள்ளிட்ட மாணவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு நடைமுறையில் இருந்தன. கொரோனா பெருந்தொற்றால் கடந்த சில ஆண்டுகளாக இம்மன்றங்கள் செயல்படாத நிலையில் அவற்றைப் புதுப்பித்து சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்யப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

2022–2023ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு வாரமும் நடைபெறும் மன்றச் செயல்பாடுகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கில் பார்வை (3)–ல் காணும் செயல்முறைகளின்படி இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம், சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் மற்றும் வானவில் மன்றம் போன்றவற்றை ஒவ்வொரு பள்ளியிலும் நிறுவி ஒவ்வொரு மாதமும் நிகழ்ச்சிகளும் போட்டிகளும் நடத்தவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மாவட்ட அளவில் நடைபெறும் சிறார் திரைப்படம், இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம் மற்றும் வானவில் மன்றம் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவர்கள் மாநில அளவிலான போட்டிகள் மற்றும் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் வாய்ப்பையும், அதில் வெற்றி பெறுபவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வாய்ப்பு அளிக்கப்படும்.

அரசு பள்ளிகளில் பயிலும 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவர்கள் பங்கேற்கும் வகையில் எந்தவொரு பள்ளியும் விடுபடாமல், போட்டிகளை நடத்த நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அனைத்து வகைப் போட்டிகளிலும் ஒருசில குறிப்பிட்ட மாணவர்களே வெற்றிபெறும் வகையில் அல்லாமல் ஒவ்வொரு போட்டியிலும் வெவ்வேறு மாணவர்கள் வெற்றிபெறும் வகையில் அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி, வட்டார, மாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெற வேண்டிய கால அட்டவணை இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி நடத்திடப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு நிலையிலும் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களின் விவரங்களை இணைப்பு 3-ல் கண்டுள்ள இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பள்ளியளவில் /ஒன்றிய அளவில்/மாவட்டஅளவில் நடக்கும் போட்டிகள் குறித்த தகவல்கள், புகைப்படங்கள், வெற்றியாளர்களின் விவரங்கள், சிறப்பு விருந்தினர்களின் விவரங்கள் போன்றவற்றை முழுமையாக ஒருங்கிணைந்தபள்ளிக்கல்வி மாவட்ட திட்டஅலுவலகத்தில் உள்ள ஊடக ஆவணப்படுத்தும் ஒருங்கிணைப்பாளர்(MDO) மற்றும் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் (PRO), பத்திரிக்கையாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும் அனைத்து மன்றச் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் சிறப்பாக செயல்படுத்திடவும் பள்ளி அளவில் பொறுப்பு அலுவலராக சம்மந்தப்பட்ட மன்றத்தின் பொறுப்பு ஆசிரியர்/ தலைமை ஆசிரியரும், ஒன்றிய அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு மாவட்டக் கல்வி அலுவலக பள்ளித் துணை ஆய்வாளரும் மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு பொறுப்பு அலுவலராக முதன்மைக் கல்வி அலுவலக பள்ளித் துணை ஆய்வாளரும் பொறுப்பேற்றுக் கொண்டு போட்டிகளை சிறப்பான முறையில் நடத்திட அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :1, 2, மற்றும் 3.

ஆணையருக்காக,
6/2/23

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள். (மின்னஞ்சல் வழியாக)

நகல்

1.அரசு முதன்மைச் செயலாளர்,பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை - 9.

2. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை-6

## இணைப்பு–1

### போட்டிகள் நடைபெறும் நாட்கள் - ஆண்டு – 2022–23

| | பிப்ரவரி | | | மார்ச் | | |
|---|---|---|---|---|---|---|
| | பள்ளி அளவில் | வட்டார அளவில் | மாவட்ட அளவில் | பள்ளி அளவில் | வட்டார அளவில் | மாவட்ட அளவில் |
| சிறார் திரைப்படங்கள் | பிப்ரவரி 13–17, 2023 | பிப்ரவரி 20–22, 2023 | பிப்ரவரி27–28, 2023 | மார்ச் 13 – 17, 2023 | மார்ச்20 – 22, 2023 | மார்ச் 27 – 28, 2023 |
| வினாடி வினா மன்றம் | பிப்ரவரி 20 – 24, 2023 | பிப்ரவரி27–மார்ச் 1, 2023 | மார்ச் 6 – 7, 2023 | மார்ச் 20 – 24, 2023 | மார்ச் 27 – 29, 2023 | ஏப்ரல் 3 – 4, 2023 |
| இலக்கிய மன்றம் | பிப்ரவரி 6 – 10, 2023 | பிப்ரவரி 13 – 15, 2023 | பிப்ரவரி 20– 21, 2023 | மார்ச் 6 – 10, 2023 | மார்ச் 13 – 15, 2023 | மார்ச் 20 – 21, 2023 |
| வானவில் மன்றம் | பிப்ரவரி மாதம் முழுவதும் | மார்ச் 6– 8, 2023 | மார்ச் 13 – 14, 2023 | மார்ச் மாதம் முழுவதும் | ஏப்ரல்3 – 5, 2023 | ஏப்ரல் 10 – 11, 2023 |

# இணைப்பு–2

## சிறார் திரைப்படங்கள் திரையிடுதல்

<table>
<tr><th>பிரிவு</th><th>வட்டார அளவில்</th><th>மாவட்ட அளவில்</th></tr>
<tr><td>நிகழ்வை நடத்துவதற்கான வடிவம்</td><td>1. தனி நபர் பிரிவு<br>2. குழு</td><td>1. தனி நபர் பிரிவு<br>2. குழு</td></tr>
<tr><td>கருப்பொருள் (திரையிடப்பட்ட திரைப்படம் சார்ந்து மட்டும்)</td><td>1. தன்னம்பிக்கை<br>2. நேர்மறை சிந்தனை<br>3. அன்பு</td><td>1. பாலின சமத்துவம்<br>2. மூட நம்பிக்கை</td></tr>
<tr><td>நடத்தப்படும் போட்டிகளின் வகைகள் (எழுதப்படுவது – கட்டுரை/ விமர்சனம்/ கதை/ வினாடிவினா)</td><td>பள்ளிகளில் திரையிடப்பட்ட திரைப்படங்களை போட்டிகளுக்கான அடிப்படையாக பயன்படுத்தப்படலாம்<br><table>
<tr><th>S. No.</th><th>Name of the Movie</th><th>Language</th><th>Duration</th></tr>
<tr><td>1</td><td>The Kid (1921)</td><td>Silent Movie</td><td>68 mns</td></tr>
<tr><td>2</td><td>Children of Heaven (1997)</td><td>Iranian</td><td>89 mns</td></tr>
<tr><td>3</td><td>The Red Balloon (195 )</td><td>French</td><td>34 mns</td></tr>
</table></td><td>பள்ளிகளில் திரையிடப்பட்ட திரைப்படங்களை போட்டிகளுக்கான அடிப்படையாக பயன்படுத்தப்படலாம்<br><table>
<tr><th>S. No.</th><th>Name of the Movie</th><th>Language</th><th>Duration</th></tr>
<tr><td>1</td><td>The Kid (1921)</td><td>Silent Movie</td><td>68 mns</td></tr>
<tr><td>2</td><td>Children of Heave (1997)</td><td>Iranian</td><td>89 mns</td></tr>
<tr><td>3</td><td>The Red Balloon (1956)</td><td>French</td><td>34 mns</td></tr>
</table></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 4 | Gubb chigalu (2008) | Kannada | 92 mns |
| 5 | Shwaas (2004) | Marathi | 107 mns |
| 6 | Modern Times (1936) | English | 87 mns |
| 7 | Malli (1998) | Tamil | 90 mns |

**போட்டிகளின் வகைகள்**

1. படத்தின் சுவரொட்டி வடிவமைத்தல்– கதாபாத்திரங்கள், படத்தின் கரு, கதைக்களம், இடம், நிறம் போன்றவற்றைப் பயன்படுத்தி (தனிநபர்)
2. கதைச் சுருக்கம் எழுதுதல் (தனிநபர்)
3. புகைப்படம்– (கைப்பேசி அல்லது புகைப்படக் கருவி வாயிலாக) (தனி நபர்)
4. திரைப்படத்தின் ஒரு காட்சியை இயக்குதல் (தனி நபர்)

| | | | |
|---|---|---|---|
| 4 | Gubbachigalu (2008) | Kannada | 92 mns |
| 5 | Shwaas (2004) | Marathi | 107 m s |
| 6 | Modern Times (1936) | English | 87 mns |
| 7 | Malli (1998) | Tamil | 90 mns |

**போட்டிகளின் வகைகள்**

1. படத்தின் சுவரொட்டி வடிவமைத்தல்– கதாபாத்திரங்கள், படத்தின் கரு, கதைக்களம், இடம், நிறம் போன்றவற்றைப் பயன்படுத்தி (தனிநபர்)
2. கதைச் சுருக்கம் எழுதுதல் (தனிநபர்)
3. புகைப்படம் – (கைப்பேசி அல்லது புகைப்படக் கருவி வாயிலாக) (தனி நபர்)
4. திரைப்படத்தின் ஒரு காட்சியை இயக்குதல் (தனி நபர்)

| | | |
|---|---|---|
| | 5. பட சுருக்கத்தை சிறு நாடகம் / மௌன நாடகமாக நடத்துதல் (குழு)<br>6. திரைப்பட விமர்சனம் (தனிநபர்)<br>7. திரைப்படத்தின் கதை / முடிவு பற்றிய விவாதம் (குழு) | 5. பட சுருக்கத்தை சிறு நாடகம் / மௌன நாடகமாக நடத்துதல் (குழு)<br>6. திரைப்பட விமர்சனம் (தனிநபர்)<br>7. திரைப்படத்தின் கதை / முடிவு பற்றிய விவாதம் (குழு) |
| மதிப்பெண் கட்டமைப்பு | 1. படைப்பாற்றல் – 10 மதிப்பெண்கள்<br>i. வண்ணங்களின் பயன்பாடு (போட்டிகளின் வகை 1 & 3 க்கு மட்டும்)<br>ii. சுய சிந்தனை (originality) (போட்டிகளின் வகை 1–7)<br>iii. தள வடிவமைப்பு அல்லது இடத்தின் பயன்பாடு (போட்டிகளின் வகை 1, 3, 4, 5 க்கு மட்டும்)<br>iv. புகைப்படம் எடுத்தல் சிந்திக்கும் தன்மை / படத்தின் தெளிவு (போட்டிகளின் வகை 1–7)<br>v. ஒளி (போட்டிகளின் வகை 3) | 1. படைப்பாற்றல் – 10 மதிப்பெண்கள்<br>vi. வண்ணங்களின் பயன்பாடு (போட்டிகளின் வகை 1 & 3 க்கு மட்டும்)<br>vii. சுய சிந்தனை (originality) (போட்டிகளின் வகை 1–7)<br>viii. தள வடிவமைப்பு அல்லது இடத்தின் பயன்பாடு (போட்டிகளின் வகை 1, 3, 4, 5 க்கு மட்டும்)<br>ix. புகைப்படம் எடுத்தல் சிந்திக்கும் தன்மை / படத்தின் தெளிவு (போட்டிகளின் வகை 1–7)<br>x. ஒளி (போட்டிகளின் வகை 3) |

| | | |
|---|---|---|
| | 2. நேரப் பயன்பாடு – 10 மதிப்பெண்கள் (1–7 இல் உள்ள அனைத்து போட்டிகளின் வகை)<br>3. பொருட்கள் பயன்பாடு – 15 மதிப்பெண்கள் (போட்டிகளின் வகை 4 & 5)<br>4. விளக்கிக் கூறும் தன்மை – 10 மதிப்பெண்கள் (1–7 ல் உள்ள அனைத்து போட்டிகளின் வகை)<br>5. எளிதில் புரியவைத்தல் – படத்தின் முக்கிய கருவை தொடர்புபடுத்துதல் – 5 மதிப்பெண்கள் (1–7 ல் உள்ள அனைத்து போட்டிகளின் வகை) | 2. நேரப் பயன்பாடு – 10 மதிப்பெண்கள் (1–7 இல் உள்ள அனைத்து போட்டிகளின் வகை)<br>3. பொருட்கள் பயன்பாடு – 15 மதிப்பெண்கள் (போட்டிகளின் வகை 4 & 5)<br>4. விளக்கிக் கூறும் தன்மை – 10 மதிப்பெண்கள் (1–7 ல் உள்ள அனைத்து போட்டிகளின் வகை)<br>எளிதில் புரியவைத்தல் – படத்தின் முக்கிய கருவை தொடர்புபடுத்துதல் – 5 மதிப்பெண்கள் (1–7 ல் உள்ள அனைத்து போட்டிகளின் வகை) |
| பரிந்துரைக்கப்பட்ட நடுவர் | ஆசிரியர்கள், கலைஞர்கள் (எழுத்தாளர்கள், இயக்குனர்கள், கலை இயக்குனர்கள், பாடலாசிரியர்கள், நடிகர்கள், பாடகர்கள், நடன இயக்குனர்கள், நாட்டுப்புற கலைஞர்கள், ஒளிப்பதிவாளர்கள், படத்தொகுப்பாளர்கள், | கலைஞர்கள் (எழுத்தாளர்கள், இயக்குனர்கள், கலை இயக்குனர்கள், பாடலாசிரியர்கள், நடிகர்கள், பாடகர்கள், நடன இயக்குனர்கள், நாட்டுப்புற கலைஞர்கள், ஒளிப்பதிவாளர்கள், படத்தொகுப்பாளர்கள், ஒலிப் பொறியாளர்கள், |

| | | |
|---|---|---|
| | ஒலிப் பொறியாளர்கள், சுவரொட்டி வடிவமைப்பாளர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், கலைத் துறை பயிற்சியாளர்கள்) | சுவரொட்டி வடிவமைப்பாளர்கள், ஒப்பனை கலைஞர்கள், கலைத் துறைகளில் பயிற்சியாளர்கள்) |
| பரிந்துரைக்கப்பட்ட இடம் | **மேல்நிலைப் பள்ளி / வட்டார வள மையம்** | **மேல்நிலைப் பள்ளி / வட்டார வள மையம்** |
| பரிந்துரைக்கப்பட்ட காலம் | 1. புதிய அணுகுமுறையுடன் படத்தின் சுவரொட்டியை வடிவமைத்தல்– கதாபாத்திரங்கள், படத்தின் கரு, கதைக்களம், இடம், நிறம் போன்றவற்றைப் பயன்படுத்தி (தனிநபர்) – **1 மணி நேரம்**<br>2. கதைச் சுருக்கம் எழுதுதல் (தனிநபர்) – 1 **மணிநேரம்**<br>3. புகைப்படம் எடுத்தல் (கைபேசி அல்லது புகைப்பட கருவி (Camera) (தனிநபர்) – 1 **மணிநேரம்**<br>4. படத்தின் ஒரு காட்சியை (தனிநபர்) **இயக்குதல் – 10 நிமிடங்கள்**<br>5. படச் சுருக்கத்தை சிறு நாடகம் / மௌன நாடகம் (குழு மூலம்) நடத்துதல் – 5– 7 **நிமிடங்கள்** | 1. புதிய அணுகுமுறையுடன் படத்தின் சுவரொட்டியை வடிவமைத்தல்– கதாபாத்திரங்கள், படத்தின் கரு, கதைக்களம், இடம், நிறம் போன்றவற்றைப் பயன்படுத்தி (தனிநபர்) **– 1 மணி நேரம்**<br>2. கதைச் சுருக்கம் எழுதுதல் (தனிநபர்) – 1 **மணிநேரம்**<br>3. புகைப்படம் எடுத்தல் (கைபேசி அல்லது புகைப்பட கருவி (Camera) (தனிநபர்) – 1 **மணிநேரம்**<br>4. படத்தின் ஒரு காட்சியை (தனிநபர்) **இயக்குதல் – 10 நிமிடங்கள்**<br>5. படச் சுருக்கத்தை சிறு நாடகம் / மௌன நாடகம் (குழு மூலம்) நடத்துதல் – 5– 7 **நிமிடங்கள்** |

| | | |
|---|---|---|
| | 6. திரைப்பட விமர்சனம் (தனிநபர்) – 30 நிமிடங்கள்<br>7. திரைப்படத்தின் கதைக்களம் /முடிவு பற்றிய விவாதம் (குழு) – 5 – 7 நிமிடங்கள் | 6. திரைப்பட விமர்சனம் (தனிநபர்) – 30 நிமிடங்கள்<br>7. திரைப்படத்தின் கதைக்களம் /முடிவு பற்றிய விவாதம் (குழு) – 5 – 7 நிமிடங்கள் |
| பரிசு | வட்டார / மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்க வேண்டும். | |

## வினாடி–வினா மன்றம்

| பிரிவு | வட்டார அளவில் | மாவட்ட அளவில் |
|---|---|---|
| நிகழ்ச்சி நடைபெறும் முறை | 1) தனி அறையில் 20 துரிதக் கேள்விகள் (Rapid fire round) மூலம் சிறந்த 10 அணிகள் தேர்வு செய்யப்படும் வரை அனைத்து பள்ளிகளையும் சிறு சிறு குழுக்களாகக் கொண்டு நாக் அவுட் (Knock–out) சுற்றுகளை நடத்தவும்.<br>2) தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அணிகளுக்கான போட்டியை கீழே உள்ள வழிகாட்டுதளின்படி நடத்தவும்<br>3) 10 பள்ளிகளுக்கு இடையேயான இறுதிச்சுற்று– 5 சுற்றுகளாக நடத்தப்பட வேண்டும். பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள மாணவர் இதழ்களில் இருந்து மட்டுமே கேள்விகள் கேட்கப்பட வேண்டும் | 1) தனி அறையில் 20 துரிதக் கேள்விகள் (Rapid fire round) மூலம் சிறந்த 10 அணிகள் தேர்வு செய்யப்படும் வரை அனைத்து பள்ளிகளையும் சிறு சிறு குழுக்களாகக் கொண்டு நாக் அவுட் (Knock–out) சுற்றுகளை நடத்தவும்.<br>2) தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அணிகளுக்கான போட்டியை கீழே உள்ள வழிகாட்டுதளின்படி நடத்தவும்<br>3) 10 பள்ளிகளுக்கு இடையேயான இறுதிச்சுற்று– 5 சுற்றுகளாக நடத்தப்பட வேண்டும். போட்டிக்கு ஒரு வாரம் முன்னதாக பல்வேறு நாளிதழ்களில் வெளிவந்துள்ள பொது அறிவு, நாட்டு நடப்பு குறித்து கேள்விகள் கேட்கப்பட வேண்டும். |
| கருப்பொருள் | ஜனவரி/ பிப்ரவரி மாத மாணவர் இதழ்களில் வந்த பொருள் சார்ந்து | போட்டிக்கு முந்தய ஒரு வாரம் பல்வேறு நாளிதழ்களில் வந்துள்ள பொது அறிவு, நாட்டு நடப்பு சார்ந்து |
| நடத்தப்பட உள்ள போட்டிகளின் வகை (எழுத்து / கட்டுரை / விமர்சனம்/ கதை / வினாடி வினா ) | ஒளி, காணொளி, விளக்கம் போன்றவற்றின் மூலம் ஒருகருத்து /இணைக்கும்புள்ளி /ஆளுமையைக் கண்டறிவது. | ஒளி, காணொளி, விளக்கம் போன்றவற்றின் மூலம் ஒரு கருத்து/ இணைக்கும்புள்ளி / ஆளுமையைக் கண்டறிவது. |

| | | |
|---|---|---|
| பரிந்துரைக்கப்படும் நடுவர் குழு | உள்ளூர் வினாடி வினா வல்லுநர்கள் அல்லது பாட வல்லுநர்கள், மற்றும் கற்றறிந்த பாட ஆசிரியர்களாக கண்டறியப்பட்டவர்கள் | மாவட்ட அளவிலான வினாடி வினா வல்லுநர்கள் அல்லது பாட வல்லுநர்கள் மற்றும் கற்றறிந்த தலைமை ஆசிரியர்கள். |
| பரிந்துரைக்கப்படும் இடம் | வட்டார வள மையம்/மேல்நிலைப்பள்ளி | மாவட்ட ஆட்சியரக வளாகம்/ மேல்நிலைப்பள்ளி / வட்டார வள மையம் |
| பரிசு | வட்டார / மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்க வேண்டும். | |

# இலக்கிய மன்றம்

| பிரிவு | வட்டார அளவில் | மாவட்ட அளவில் |
|---|---|---|
| நிகழ்ச்சி நடைபெறும் முறை | தனிநபர் நிகழ்வு | தனிநபர் நிகழ்வு |
| கருப்பொருள் | 1) நான் படித்த புத்தகம்<br>2) நான் போற்றும் தலைவர் | 1) குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு<br>2) கல்வியும் கல்லாமையும் |
| நடத்தப்பட உள்ள போட்டிகளின் வகை (எழுத்து / கட்டுரை / விமர்சனம் / கதை / வினாடி வினா | **எழுதுதல்**<br>➢ கட்டுரை எழுதுதல் (ஏற்கனவே தயாரித்து எழுதுவது)<br>➢ கதையை முழுமைப்படுத்துதல் (போட்டி நடைபெறும் நேரத்தில் தானிக எழுதுவது)<br>**பேச்சுப் போட்டி**<br>➢ பேச்சுத் திறமை (அளிக்கப்பட்ட தலைப்பில்)<br>➢ போட்டி நடைபெறும் நேரத்தில் வழங்கப்படும் தலைப்பில் | **எழுதுதல்**<br>➢ கட்டுரை எழுதுதல் (ஏற்கனவே தயாரித்து எழுதுவது)<br>➢ கதையை முழுமைப்படுத்துதல் (போட்டி நடைபெறும் நேரத்தில் தானிக எழுதுவது)<br>**பேச்சுப் போட்டி**<br>➢ பேச்சுத் திறமை (அளிக்கப்பட்ட தலைப்பில்)<br>➢ போட்டி நடைபெறும் நேரத்தில் வழங்கப்படும் தலைப்பில் |
| மதிப்பிடும் முறை | எழுத்து– மொத்த மதிப்பெண் –20<br>பொருளடக்கம் (கருப்பொருளுக்கு ஒத்ததாகவும் விரிவானதாகவும், தனித்தன்மையாகவும் | எழுத்து– மொத்த மதிப்பெண் –20<br>பொருளடக்கம் (கருப்பொருளுக்கு ஒத்ததாகவும் விரிவானதாகவும், தனித்தன்மையாகவும் |

| | | |
|---|---|---|
| | இருத்தல். நுண்ணறிவு – (10 மதிப்பெண்)<br>➢ அமைப்பு (சிந்தனையில் தெளிவு, படைப்பாற்றல், ஒற்றுமை மற்றும் நிலைப்பாங்கு) (5 மதிப்பெண்)<br>➢ எழுத்துக் கட்டமைப்பு (பிழையின்றி எழுதுதல், இலக்கணம்) (5 மதிப்பெண்)<br><br>பேச்சு–மொத்த மதிப்பெண்–10<br>➢ பொருள் சார்ந்த பொருத்தம்– (4 மதிப்பெண்)<br>➢ திட்டமிட்ட எண்ணவோட்டம்/ கருத்துகள் ( 2 மதிப்பெண்கள்)<br>➢ குரல் உச்சரிப்பு, குறிப்புகள் மற்றும் சொல்லாடல்கள் ( 2 மதிப்பெண்கள்)<br>➢ தயாரிப்பு மற்றும் முயற்சி ( 2 மதிப்பெண்கள்) | இருத்தல். நுண்ணறிவு – (10 மதிப்பெண்)<br>➢ அமைப்பு (சிந்தனையில் தெளிவு, படைப்பாற்றல், ஒற்றுமை மற்றும் நிலைப்பாங்கு) (5 மதிப்பெண்)<br>➢ எழுத்துக் கட்டமைப்பு (பிழையின்றி எழுதுதல், இலக்கணம்) (5 மதிப்பெண்)<br><br>பேச்சு–மொத்த மதிப்பெண்–10<br>➢ பொருள் சார்ந்த பொருத்தம் - (4 மதிப்பெண்)<br>➢ திட்டமிட்ட எண்ணவோட்டம்/ கருத்துகள் ( 2 மதிப்பெண்கள்)<br>➢ குரல் உச்சரிப்பு, குறிப்புகள் மற்றும் சொல்லாடல்கள் ( 2 மதிப்பெண்கள்)<br>➢ தயாரிப்பு மற்றும் முயற்சி ( 2 மதிப்பெண்கள்) |
| பரிந்துரைக்கப்படும் நடுவர் குழு | 1.) உள்ளூர் எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் (புத்தகங்கள் எழுதி வெளியிட்ட ஆசிரியர்கள்/ எழுத்தாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம் | 1.) உள்ளூர் எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் (புத்தகங்கள் எழுதி வெளியிட்ட ஆசிரியர்கள்/ எழுத்தாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம்) |

| | | |
|---|---|---|
| | | 2.) 3 நடுவர் மதிப்பீட்டில் அதிக மதிப்பெண் பெறுபவரை எடுத்துக்கொள்ள வேண்டும். |
| பரிந்துரைக்கப்படும் மையம் | மேல்நிலை பள்ளி / வட்டார வள மையம் | மேல்நிலை பள்ளி / மாவட்ட ஆட்சியர் அலுவலகம் |
| பரிந்துரைக்கப்படும் கால அளவு | எழுத்து- 30 - 45 நிமிடங்கள்<br>➢ கட்டுரைப்போட்டி ( ஏற்கனவே தயாரித்து எழுதுவது) – 45 நிமிடம்<br>➢ கதையை முழுமைப்படுத்துதல் (போட்டி நடைபெறும் நேரத்தில் தானாக எழுதுவது) –30 நிமிடம்<br>பேச்சு (5 – 6 நிமிடம்)<br>➢ பேச்சுத் திறமை (ஏற்கனவே தயாரித்து பேசுவது)– 5 நிமிடம்<br>➢ உடனடித் தலைப்பில் பேச்சு (நடைபெறும் இடத்தில் தலைப்பு முடிவு செய்தல்) - 6 நிமிடம். | எழுத்து- 30 - 45 நிமிடங்கள்<br>➢ கட்டுரைப்போட்டி ( ஏற்கனவே தயாரித்து எழுதுவது) – 45 நிமிடம்<br>➢ கதையை முழுமைப்படுத்துதல் (போட்டி நடைபெறும் நேரத்தில் தானாக எழுதுவது) –30 நிமிடம்<br>பேச்சு (5 – 6 நிமிடம்)<br>➢ பேச்சுத் திறமை (ஏற்கனவே தயாரித்து பேசுவது)– 5 நிமிடம்<br>➢ உடனடித் தலைப்பில் பேச்சு (நடைபெறும் இடத்தில் தலைப்பு முடிவு செய்தல்) - 6 நிமிடம். |
| பரிசு | வட்டார / மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்க வேண்டும். | |

# வானவில் மன்றம்

| பிரிவு | வட்டார அளவில் | மாவட்ட அளவில் |
|---|---|---|
| நிகழ்ச்சி நடைபெறும் முறை | தனி நபர் நிகழ்வு | தனி நபர் நிகழ்வு |
| கருப்பொருள் | <u>பிப்ரவரி மாத கரு</u>:<br>அன்றாட வாழ்வில் காற்றழுத்தம்/ வெப்பம்/ வேதியியல்<br><u>மார்ச் மாத கரு</u>::<br>அன்றாட வாழ்வில் ஒளி. | <u>பிப்ரவரி மாத கரு</u>:<br>அன்றாட வாழ்வில் காற்றழுத்தம்/ வெப்பம்/ வேதியியல்<br><u>மார்ச் மாத கரு</u>:<br>அன்றாட வாழ்வில் ஒளி. |
| நடத்தப்படவுள்ள போட்டிகளின் வகை | <u>மாதிரி தயாரித்தல்</u><br>1.) 6–8 வகுப்பு மாணவர்கள் தனி நபராக இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.<br>2.) குறைந்த விலையிலான பொருட்களைப் பயன்படுத்தித் தயாரிக்க வேண்டும்.<br>3.) மாணவர்கள் மட்டுமே பொருளைத் தயாரிக்க வேண்டும்.<br>4.) மாணவர்கள் அதனை விளக்கத் தெரிந்து இருக்க வேண்டும் (பயன்பாடு மற்றும் தயாரிக்கப்பட்ட முறை, கரு குறித்து). | <u>மாதிரி தயாரித்தல்</u><br>1.) 6–8 வகுப்பு மாணவர்கள் தனி நபராக இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.<br>2.) குறைந்த விலை, விலை மதிப்பற்ற பொருட்கள் பயன்படுத்தி பொருள் தயாரிக்க வேண்டும்.<br>3.) மாணவர்கள் மட்டுமே பொருளைத் தயாரிக்க வேண்டும்.<br>4.) மாணவர்கள் அதனை விளக்கத் தெரிந்து இருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 5.) அன்றாட வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகள் சார்ந்த கருப் பொருளுக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம்<br>6.) இது குறித்த நடக்கும் பள்ளி / வட்டார / மாவட்ட அளவிலான கண்காட்சிக்கு பெற்றோர் / பொதுமக்களை அழைக்க வேண்டும் | (பயன்பாடு மற்றும் தயாரிக்கப்பட்ட முறை, கரு குறித்து)<br>5.) அன்றாட வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகள் சார்ந்த கருப் பொருளுக்கு முன்னுரிமை அளிக்கப்படலாம்<br>6.) இது குறித்த நடக்கும் பள்ளி / வட்டார / மாவட்ட அளவிலான கண்காட்சிக்கு பெற்றோர் / பொதுமக்களை அழைக்க வேண்டும் |
| மதிப்பிடும் முறை | 1) கருத்தின் தனித்தன்மை - (5 மதிப்பெண்)<br>2) கொடுக்கப்பட்ட கருவோடு ஒத்த நிலை– 5 மதிப்பெண்கள்<br>3) குறைந்த விலைப்பொருட்கள் பயன்பாடு – 5 மதிப்பெண்கள்<br>4) பொருளின் கரு குறித்து தன்னம்பிக்கையுடன் விளக்கும் திறன் - 5 மதிப்பெண்கள்<br>5) கேட்கப்படும் கேள்விகட்குப் பதில் அளித்தல் - 5 மதிப்பெண்கள். | 1) கருத்தின் தனித்தன்மை - (5 மதிப்பெண்)<br>2) கொடுக்கப்பட்ட கருவோடு ஒத்த நிலை– 5 மதிப்பெண்கள்<br>3) குறைந்த விலைப்பொருட்கள் பயன்பாடு – 5 மதிப்பெண்கள்<br>4) பொருளின் கரு குறித்து தன்னம்பிக்கையுடன் விளக்கும் திறன் - 5 மதிப்பெண்கள்<br>5) கேட்கப்படும் கேள்விகட்குப் பதில் அளித்தல் - 5 மதிப்பெண்கள். |
| பரிந்துரைக்கப்படும நீதிபதிகள் குழு | வட்டாரக் கல்வி அலுவலர் / அறிவியல் ஆசிரியர் பயிற்றுநர் வானவில் மன்ற கருத்தாளர் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் / அரசு | DIET பயிற்றுநர்– கல்லூரி / மாவட்ட அளவிலான நிறுவன விரிவுரையாளர்கள்– அரசு உதவிபெறும் பள்ளி / அரசு மேல்நிலைப் பள்ளி |

| | | |
|---|---|---|
| | உதவி பெறும் பள்ளி தலைமையாசிரியர் (அறிவியல் பின்புலத்துடன்) | தலைமையாசிரியர் (அறிவியல் பின்புலத்துடன்) |
| பரிந்துரைக்கப்படும் மையம் | மேல்நிலைப்பள்ளி / வட்டார வள மையம் | மேல்நிலைப்பள்ளி / வட்டார வள மையம் |
| பரிந்துரைக்கப்படும் கால அளவு | ஒரு மாணவருக்கு 5 நிமிடம் - பொருள் மற்றும் அதுகுறித்த அறிவியலை விளக்க 2 நிமிடம் - கேள்வி/ பதில். | ஒரு மாணவருக்கு 5 நிமிடம் - பொருள் மற்றும் அதுகுறித்த அறிவியலை விளக்க 2 நிமிடம் - கேள்வி/ பதில். |
| பரிசு | வட்டார / மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்க வேண்டும். | |

பள்ளி / வட்டார அளவில் வெற்றிபெறும் மாணவர்களின் விவரங்களை கீழ்கண்ட இணையதளத்தின் விரைவு துலங்கல் (QR code) பயன்படுத்தி பதிவேற்றம் செய்யப்படவேண்டும்

| போட்டி | பள்ளிஅளவில் | வட்டாரஅளவில் |
|---|---|---|
| சிறார்திரைப்படங்கள் | http://bit.ly/3X3k6tV | http://bit.ly/3WWbqW0 |
| வினாடிவினாமன்றம் | http://bit.ly/40CSfDQ | http://bit.ly/3wTKeNe |
| இலக்கியமன்றம் | http://bit.ly/3DDxcae | http://bit.ly/3Ynku7y |
| வானவில்மன்றம் | | http://bit.ly/3DBNnEQ |

குறிப்பு– மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களின் விவரங்களை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்திடல் சார்ந்து பின்னர்தெரிவிக்கப்படும்.